# 5.7 தீக்குவியல் கண்காட்சி

வனங்களில் வாழ்ந்த மனிதர்கள் தமது உணவுகளைக் காட்டிலே தேடிக்கொண்டனர். வேட்டையாடிய விலங்குகள் , மரங்களின் பட்டை, காய்கனிகள், கிழங்குவகைகள் ஆகியவற்றை அவர்கள் பச்சையாகவே உட்கொண்டனர். எனினும், தீயைக் கண்டுபிடித்த பின் தமது உணவை அவிக்கவும், தீயில் இட்டுச் சுட்டு உட்கொள்வதற்கும் அவர்கள் பழகிக்கொண்டனர். வனவாழ்க்கையில் தீ அவர்களின் தெய்வத்திற்குச் சமமானதாக இருந்தது. ஏனெனில், அவர்களுக்கு தீ முக்கியமானதாக இருந்தது. அவர்கள் தீயைத் தெய்வமாக மதித்துப் பலவிதமான பூஜைகள், ஆராதனைகள், யாகங்கள் போன்றவற்றைச் செய்தனர்.

அன்று போன்றே இன்றும் மனிதர்களுக்குத் தீ மிக முக்கியமானதென நீங்கள் அறிவீர்களா? நீங்கள் உட்கொள்ளும் உணவின் சுவையைப் பற்றி எவ்வளவு கவனம் எடுக்கின்றீர்கள்? உணவைச் சுவையாகத் தயாரித்துக் கொள்வதற்கு தீ முக்கியமானதாகும். அவ்வாறே எமது அன்றாட வாழ்க்கையில் பலவிதமான செயற்பாடுகளுக்கும் தீ பயனுள்ளதாகும். வெளிக்களச் செயற்பாடுகள், இரவு முகாம்கள், சாரணர் முகாம்கள், உல்லாசப்பயணம் முதலிய சந்தர்ப்பங்களில் மகிழ்ச்சி, உல்லாசம் முதலிய பலவித நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக தீக்குவியல் பயன்படும். அவ்வாறான சந்தர்ப்பங்களின்போது கண்காட்சியாகத் தீக்குவியல் எரியவைக்கப்படும் அவற்றை தீக்குவியல் கண்காட்சி என அழைப்போம். தீக்குவியல் கண்காட்சி பற்றி மேலும் சில விடயங்களை ஆராய்வோம்.

## தீக்குவியலின் பயன்கள்

- ஒளியைப் பெற்றுக்கொள்ளல்.
- குளிர்ந்த வானிலை அல்லது காலநிலை நிலைமைகளில் வெப்பத்தைப் பெற்றுக்கொள்ளல்.
- உணவுவகைகள் விசேடமாகத் தானியவகைகள், இறைச்சி வகைகளைச் சுட்டுக் கொள்ளல்.
- பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருக்கும்.
- வனவிலங்குகளிலிருந்து பாதுகாத்தல்.
- எதிரிகளிடம் இருந்து பாதுகாத்தல். விசேடமாக தீக்குவியல் பகுதியில் அதிகமானோர் இருப்பதாகவும் அவர்கள் நித்திரையின்றி விழிப்புடன் இருப்பதாகவும் எதிரிகளுக்கு அறிவித்தல் கிடைத்தல்.




உரு 5.7.1

**முறையான தீக்குவியல் ஒன்றைத் தயாரிப்பதற்கு முன்னர் கவனிக்க வேண்டியவை**


- முகாம் அமைத்தல், வெளிக்களச் செயற்பாடு ஒன்று அல்லது வனத்தில் தீக்குவியல் ஒன்று தயாரிப்பதாயின் குறித்த நிலப்பகுதியின் உரிமையாளர் அல்லது பொறுப்பாக இருப்பவர்களிடம் அனுமதி பெற்றுக்கொள்ள வேண்டும்.
- அதே போன்று குறித்த பகுதியில் வேறு வீடுகள், கட்டடங்கள் இருப்பின் அங்குள்ளவர்களுக்கும் அறிவிக்க வேண்டும்.
- தீக்குவியலைத் தயார்செய்வதற்கு எதிர்பார்க்கும் தினங்களுக்கு முன்னர் தேவைப்படுகின்ற விறகைச் சேர்த்து வைத்துக்கொள்ள வேண்டும்.
- இங்கு கவனிக்கவேண்டிய விடயம் பெறுமதியான பலகை வகைகளை இதற்குப் பயன்படுத்தக்கூடாது என்பது இங்கு கவனிக்கப்பட வேண்டியதாகும்.
- பயன்படுத்தப்படும் பலகைகளில் சிறிய பூச்சிகள் இருப்பின் அவற்றின் உயிர்ப் பாதுகாப்பிற்காக அவற்றை அகற்றி விட வேண்டும்.
- பழுதான, உலர்ந்த விறகு வகைகளைப் பயன்படுத்த வேண்டும்.

**தீக்குவியல் அமைக்கும் முறைகள்**

- தீக்குவியல் அமைக்கும் இடத்தைச் சுற்றிய பகுதிகளைச் சுத்தப்படுத்த வேண்டும். இதன் மூலம் தீ ஏனைய இடங்களில் பரவுவதைத் தடுக்கலாம்.
- தீக்குவியல் அமைக்கும் இடத்தில் புற்கள் இருக்குமாயின் மண்ணைப் பரப்பிவிட வேண்டும்.
- பெரிய மரக்கட்டைகளைப் பயன்படுத்தி தீக் குவியலைச் சுற்றி பாதுகாப்பு அரண் ஒன்றை அமைத்துக்கொள்ள வேண்டும்.




உரு 5.7.2



உரு 5.7.3

- தீக்குவியல் அருகில் செல்வதற்கு உரிய வழிகளை மேற்குறிப்பிட்டுள்ள முறையில் அமைத்துக்கொள்ள வேண்டும்.
- பின்னர் மரத்துண்டங்கள் சிலவற்றைக் கீழ்க்குறிப்பிட்ட விதத்தில் நிலத்தில் பரப்புதல் வேண்டும்.
- நிலத்தில் பரப்பப்பட்ட மரத்துண்டங்கள் மீது மரத்தூசு, வைக்கோல், காய்ந்த புல் சிலவற்றைப் போடவும்.
- அதன் பின்னர் தேவைக்கேற்ற விறகை சரியான முறையில் அடுக்கிக்கொள்ளவும்.



உரு 5.7.4

- விறகை அடுக்கும்போது தீக்குவியலின் அருகில் இருக்கும் விறகுகள் ஒன்றையொன்று ஒட்டாத விதத்தில் வைக்க வேண்டும்.

## தீக்குவியல் வகைகள்

தீக்குவியல் பெரும்பாலும் இடம்பெறுவது சாரணர் பாசறைகளிலாகும். சாரணர் முகாம் அமைக்கும்போது தீக்குவியலுக்குப் பொருத்தமான இடம் ஒதுக்கப்பட்டிருக்கும். அவ்வாறே வெளிக்களச் செயற்பாடுகள், முகாம் அமைத்தல் என்பன மூலம் தீக்குவியலுக்கு முக்கியத்துவம் கிடைத்துள்ளது. இவ்வாறான தீக்குவியலில் பல முறைகள் காணப்படுகின்றன.

### (1) A வடிவிலான தீக்குவியல் (A fire)

- தடித்த விறகுக் கட்டை மூன்றை A வடிவாக வைத்து அதே முறையில் காய்ந்த விறகுத் துண்டுகளை வைத்துத் தீக்குவியலைத் தயாரித்துக் கொள்ளலாம்.



உரு 5.7.5

### (2) தெறிப்புத் (Reflector fire) தீக்குவியல்

- தீக்குவியலைச் சுற்றி மின்னும் கற்களை வைத்து ஒளியையும் வெப்பத்தையும் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய தீக்குவியல் ஆகும்.
- உணவைச் சூடாக்குவதற்கும் முகாம்களுக்கு அருகில் உள்ள பகுதியை வெப்பமாக வைத்துக் கொள்வதற்கும் இவ்வகையான தீக்குவியலை உபயோகிக்கலாம்.



உரு 5.7.6

**(3) செவ்வக (நாற் சதுர)த் தீக்குவியல் (Rectangular fire)**

- உருவில் காட்டப்பட்டுள்ளவாறு விறகுக் கட்டுகளையும் விறகுத் துண்டுகளையும் வைத்துத் தயாரிக்கப்பட்ட தீக்குவியல் இதுவாகும்.



உரு 5.7.7

**(4) பிரமிட் தீக்குவியல் (Pyramid fire)**



உரு 5.7.8

- விறகுத் துண்டுகளைப் பிரமிட்டு வடிவில் வைத்து விரைவாகத் தீப்பற்றக்கூடிய சில விறகுத் துண்டுகளை இடையில் வைத்துத் தீக் குவியல் அமைக்கப்படும்.

**தீக்குவியலின்போது ஏற்படக்கூடிய ஆபத்துகளைத் தவிர்க்கக்கூடிய வழிமுறைகள்**

- தீக்குவியல் தொடர்பான அறிவுள்ள ஒருவரை தீக்குவியல் ஒழுங்கமைப்பின் போது நியமித்தல் வேண்டும்.
- அவரின் ஊடாக தீக்குவியல் ஒழுங்குகள் தொடர்பான அறிவையும் புரிந்துணர்வையும் பங்குபற்றுபவர்களுக்குப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.
- நல்லொழுக்கப் பண்புகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.
- தீக்குவியல் அமைக்கப்பட்டுள்ள பகுதியைச் சுற்றியுள்ள சூழல் அபாயமற்றது என்ற திருப்தியை நிலவச்செய்ய வேண்டும்.
- தீ பரவிச்செல்வதை தடுத்துக்கொள்வதற்கு உதவும் வகையில் பச்சை இலைகள் அடங்கிய சாக்குகள் சிலவற்றைத் தயார் செய்துகொள்ளவும்.
- காற்றில் பறக்காத ஆடைகளை அணிந்துகொள்ளவும்.
- காற்றின் திசை பற்றி நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.
- தீக்குவியல் அமைக்கப்படும் தரைபற்றி முன்னறிவு இருத்தல் வேண்டும்.

- தீக்குவியல் முடிந்தவுடன் நன்றாக அணைத்துவிட வேண்டும்.
- அவ்விடத்தைவிட்டு வெளியேற முன்னர் தீ முற்றாக அணைந்துள்ளதை உறுதி செய்துகொள்ள வேண்டும்.

தீக்குவியல் கண்காட்சியின் கீதங்களும் நடனங்களும் தீக்குவியல் மூலமாக வெப்பம், ஒளி மற்றும் பாதுகாப்பு அனுகூலங்களைப் பெறுவதுடன் வேறு பல நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன.

**தீக்குவியல் கண்காட்சியின் நோக்கம்**

1. மகிழ்ச்சியைப் பெற்றுக்கொள்ளல்
2. ஒற்றுமையை வளர்த்துக்கொள்ளல்
3. அன்றைய தினத்தில் ஏற்படும் களைப்பை நீக்கிக்கொள்ளல்
4. கருத்துகளைப் பரிமாறிக்கொள்ளுதல்
5. தகவல்களைப் பற்றிக் கலந்துரையாடுதல்
6. அறிவைப் பகிர்ந்துகொள்ளல்
7. தங்கள் திறமைகளை வெளிப்படுத்தல்
8. தமது கலாசாரத்தைப் பிரதிபலித்துக் காட்டுதல்

## தீக்குவியல் கண்காட்சியின்போது இடம்பெறும் கீதங்களும் நடனங்களும்

தீக்குவியல் கண்காட்சியில் அமைக்கப்பட்ட தீக்குவியல் சிறிதாக இருத்தல் மிக முக்கியம். அது பெரிதாக இருந்தால் எவரும் அதன் அருகில் அமர்ந்து கொண்டு இரசிப்பதற்கு முடியாது. எவ்வித இடைஞ்சலும் இன்றித் தீக்குவியலைச் சுற்றி அமர்ந்து, இறுதிவரை எல்லோரும் மகிழ்வடையும் வகையில் இடத்தையும் தீக்குவியலையும் ஒழுங்கு செய்தல் வேண்டும்.

தீக்குவியல் கண்காட்சியில் இடம்பெறும் பாடல், நடிப்பு, நாடகம், பேச்சு என்பவை பொருத்தமான, தெளிவான சொற்களாலும் அர்த்தங்களாலும் அமைந்திருக்க வேண்டும். எவரினதும் மனதைப் புண்படுத்தும் வகையிலும் தங்கள் அங்கங்களை வெளிக்காட்டும் வகையிலும் இல்லாது இருப்பதைக் கவனத்திற்கொள்ள வேண்டும்.

தீக்குவியல் கண்காட்சி 1 மணி அல்லது 1½ மணித்தியாலங்களில் முடிவடையக்கூடியதாக ஒழுங்கு செய்தல் வேண்டும். நிகழ்ச்சிகள் 3 நிமிடங்களுக்கும் நாடகம் 5 நிமிடங்களுக்கும் அதிகமாக இருத்தல் கூடாது. நேரம் அதிகமாயின் தீக்குவியல் கண்காட்சியில் இருந்து பெறக்கூடிய மகிழ்ச்சி குறைவடையக்கூடும். இறுதியாக தேசிய கீதம் இசைத்தவுடன் முடிவடையும். தீக்குவியல் கண்காட்சியில் இடம்பெறும் சில கீதங்கள் கீழே காணப்படுகின்றன. சாரணர் இயக்கத்தின் ஊடாகப் பயன்படுத்தப்படும் கீதங்களை தீக்குவியல் கண்காட்சியில் பயன்படுத்துங்கள்.

1. தீச்சுடர் மேலெழும் செந்நிறம் பரவிடும்
காரிருள் மங்கியே ஒளிபெறும்
நாற்றிசைப் பாலர் நாம் வீறு கொண்ட வீரராய்
நானிலத்தின் நலனை என்றும் போற்றுவோம்

2. பாடுவோம் எல்லோரும் !!
பலவித துன்பங்கள் பனிபோல் மறைந்திட !!
பாடுவோம் எல்லோரும் !!
கீ கயமு கயமு
சியலும கறதற நதி வீயாய்
விகசீய கீ கயமு கயமு !!!

3. Sing everyone sing
All of your troubles
Will vanish like bubbles
Sing everyone sing

4. மழையை நம்பி ஏலேலோ
மண்ணிருக்க அயிலசா
மண்ணை நம்பி ஏலேலோ
மரமிருக்க - அயிலசா
மரத்தை நம்பி ஏலேலோ
கிளையிருக்க - அயிலசா
கிளையை நம்பி ஏலேலோ
கொப்பிருக்க - அயிலசா
கொப்பை நம்பி ஏலேலோ
இலையிருக்க - அயிலசா
இலையை நம்பி ஏலேலோ
பூவிருக்க - அயிலசா

பூவை நம்பி ஏலேலோ
பிஞ்சிருக்க - அயிலசா
பிஞ்சை நம்பி ஏலேலோ
காயிருக்க - அயிலசா
காயை நம்பி ஏலேலோ
கனியிருக்க - அயிலசா
கனியை நம்பி ஏலேலோ
நானிருக்க - அயிலசா
என்னை நம்பி ஏலேலோ
நீயிருக்க - அயிலசா
உன்னை நம்பி ஏலேலோ
நானிருக்க - அயிலசா
அயிலசா அயிலசா

**செயற்பாடு 5.7.1**

உங்கள் ஆசிரியர் அல்லது ஆசிரியையின் வழிகாட்டலில் தீக்குவியல் கண்காட்சி ஒன்றைத் தெரிவு செய்யவும். இது பற்றிய அறிக்கை ஒன்றைத் தயாரிக்கவும்.

உசாத் துணை நூல்கள்

FIVB - Rules of the Game (Approved by the 31st FIVB Congress 2008 )
Soccer Coaching Manual - LA84 Foundation
Laws of the Game - 2008/ 2009 - FIFA
How to play Soccer - Ronnie Glavin
බාලදක්ෂ විද්‍යාව - ශ්‍රී ලංකා බාලදක්ෂ සංගමය
දැල්පන්දු ක්‍රීඩා මඟ - චන්ද්‍රා වික්‍රමරත්න
දැල්පන්දු නීති රීති - ශ්‍රී ලංකා දැල්පන්දු සංගමය